செ.வெ.எண்: 756 நாள்: 19.11.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் உலக பராம்பரிய வார விழா பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்திய தொல்ப் பொருள் ஆய்வுத்துறை சார்பில் உலக பராம்பரிய வார விழாவினை முன்னிட்டு தஞ்சாவூர் பெரிய கோயில் வளாகத்தில் விழிப்புணர்வு மரபு நடை பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் இ.கா.ப,அவர்கள் முன்னிலையில் இன்று (19.11.2020)தொடங்கி வைத்தார்.

பேரணியை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது :

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தஞ்சாவூர் பெரிய கோயில் மற்றும் தாராசுரம் ஐராதீஸ்வரர் கோயில் ஆகியவை யுனஸ்கோவினால் உலக பாரம்பரிய சின்னங்களாக அறிவிக்கப்பட்டவையாகும். தஞ்சாவூர் பெரிய கோயில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் இந்திய நாட்டிற்கே உலகளவில் பெருமை சேர்க்கக்கூடிய ஒரு இடமாகும்.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நம்முடைய தொன்மையான இடங்களை நாம் பாதுகாக்க வேண்டிய வளங்களாகும். நம் பாரம்பரிய சின்னங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவே உலக பராம்பரிய வாரம் கொண்டாடப்படுகிறது. நம்மிடமுள்ள தொன்மையான இடங்கள், அவற்றிலுள்ள அறிவு சார்ந்த விஷயங்கள் குறித்து நாம் புரிந்து கொள்வது மட்டுமல்லாமல், அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்ப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே உலக தொல்லியல் வாரத்தின் நோக்கமாகும்.

தஞ்சாவூர் பெரிய கோயில் கும்பாபிஷேகம் கடந்த பிப்ரவரி மாதம் விமரிசையாக நடைபெற்றது. பெரிய கோயில் கும்பாபிஷேகத்தை காண்பதற்கு பல்வேறு இடங்களிலிருந்து மக்கள் வருகை தந்தனர். தஞ்சாவூர் மாவட்டம் ஒரு முக்கியமான சுற்றுலா மையமாக திகழ்கிறது. ஆண்டுதோறும் 3.5 கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 2.5 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வந்து செல்கின்றனர்.மாவட்ட அளவிலான பாரம்பரிய சின்னங்கள் குழு அமைப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்

இப் பேரணியில் இந்திய தொல்ப் பொருள் ஆய்வுத்துறை அலுவலர்கள்,இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் மற்றும் மாணவ,மாணவியர் கலந்துக் கொண்டனர்.

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.